# 23-07-2024 செய்தி

## பொருளாதார வளர்ச்சி 7% ஆய்வறிக்கையில் கணிப்பு

- நிகழ் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.5-7 சதவீதம் வரை இருக்கும் எனப் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் தலைமையிலான குழு தயாரித்த 2023-24-ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் நாளான மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் தாக்கல் செய்தார்.
- அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை கோடிட்டு காட்டுவதோடு, சீன நேரடி முதலீடுகளை அதிகரிக்கவும், அந்த நாட்டிலிருந்து இறக்குமதியைக் குறைக்கவும் அழைப்பு விடுத்துள்ளது.

**ஆய்வறிக்கையின் முக்கிய அம்சங்கள்:**

- பணவீக்கம் கட்டுக்குள் இருக்கிறது. நிகழ் நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் (ஜிடிபி) 6.5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்தார் நிதியமைச்சர்

**பொருளாதாரம்**

- நடப்பு நிதியாண்டில், நாட்டில் பொருளாதார வளர்ச்சி 6.50 சதவீதத்தில் இருந்து 7.00 சதவீதமாக இருக்கும். முந்தைய நிதியாண்டில் இதே காலத்தில் இந்தியாவின் வளர்ச்சி 8.2 சதவீதமாக இருக்குமென கணிக்கப்பட்டிருந்தது.
- நடப்பு நிதியாண்டில் ஜி.டி.பி., வளர்ச்சி 7.20 சதவீதமாக இருக்குமென ரிசர்வ் வங்கி கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**பணவீக்கம்**

- இந்தியாவில் குறுகிய கால பணவீக்கம் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தாது. நடப்பாண்டு பதிவாகும் பருவமழை, இறக்குமதி பொருட்களின் விலை ஆகியவை பணவீக்கத்தை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றும்.
- 2023-24ம் நிதியாண்டில் சில்லரை பணவீக்கம் 5.4 சதவீதமாக கட்டுக்குள் இருந்தது குறிப்பிடத்தக்கது.

**வேலைவாய்ப்பு**

- வரும் 2030ம் ஆண்டு வரை, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 78.50 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வருகையானது, அனைத்து திறன் நிலைகளிலும், தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை தீர்மானிப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.
- குறிப்பாக வாடிக்கையாளர் சேவை, கல்வி, ஆரோக்கியம் போன்ற துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

**பங்கு சந்தை**

- பங்கு சந்தையில் சில்லரை முதலீட்டாளார்கள் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. சில்லரை முதலீட்டாளர்களின் மேம்பட்ட பங்கேற்பு மூலதனச் சந்தைக்கு ஸ்திரத்தன்மையைக் கொடுக்கிறது.
- இருப்பினும், உண்மையான சந்தை நிலைமைக்கு மாறாக, அதிக வருமானத்தை எதிர்பார்ப்பது கவலைக்குரிய விஷயம்.

**வங்கிகள்**

- இந்தியாவின் நீதித்துறை செயல்பாடுகள் பிரகாசமாக உள்ளன. இருப்பினும், சில பாதிப்புகளை தடுக்க தயாராக இருக்க வேண்டும்.
- முதலீடுகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் ஆதரவளிப்பதோடு, வாடிக்கையாளர்களுக்கு சேவையளிப்பதை முதன்மை நோக்கமாக வங்கிகள் செயல்பட வேண்டும்.

**ஏற்றுமதி**

- உலகளாவிய புவிசார் பிரச்னைகளுக்கு மத்தியில், இந்தியாவின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சரக்கு ஏற்றுமதி 2023-24ல் சரிவடைந்த போதிலும், சேவைத்துறை ஏற்றுமதி அதிகரித்துள்ளது.
- நடப்பாண்டில் 56.40 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சரக்கு மற்றும் சேவைகள் ஏற்றுமதிக்கு, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**சிறு தொழில்கள்**

- இந்தியாவின் ஜி.டி.பி., யில் கிட்டத்தட்ட 30 சதவீத பங்களிப்பை வழங்கும் சிறு, குறு, நடுத்தர தொழில்களுக்கு, ஒற்றைச்சார முறையில் அனுமதி, டிஜிட்டல் மயமாக்கல், கடன் பெறுவதை எளிமையாக்க மாநில அரசுகள் உதவ வேண்டும்.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு**

- நாடடின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு செலவிடப்படும் தொகை, ஜி.டி.பி., மதிப்பில் வெறும் 0.64 சதவீதமாக உள்ளது.
- அதே நேரம் சீனா 2.41 சதவீதம், அமெரிக்கா 3.47 சதவீதம், இஸ்ரேல் 5.71 சதவீதம் அளவுக்கு செலவிடுகின்றன.

**ரியல் எஸ்டேட்**

- நகரமயமாக்கல் காரணமாக வீடுகளின் தேவை அதிகரித்து வருவதால், ரியல் எஸ்டேட் துறை வளர்ச்சி பெறும். இருப்பினும், கட்டுமானத் திட்டங்கள் இடைநிறுத்தம் செய்யப்படுவது பெரும் சவாலாக கருதப்படுகிறது.

**சுற்றுலா**

- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால், உற்பத்தி, சேவை துறைகளில் வேலையிழப்பு ஏற்படக்கூடிய சூழலில், சுற்றுலா துறைகளில் இருக்கும் புதிய வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

**தொலைதொடர்பு**

- 'டிஜிட்டல் பாரத் நிடி' திட்டத்தின் வாயிலாக திரட்டப்பட்ட 80,000 கோடி ரூபாய் அரசின் வசமுள்ளது. இத்திட்டத்தில் ஆண்டொன்றுக்கு வசூலாகும் தொகையில், 5 சதவீதத்தை தொலை தொடர்பு தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- உலகளவில் அதிவேக மொபைல் பிராட் பேண்ட், சேவையளிக்கும் நாடுகளில் இந்தியா, 118வது இடத்தில் இருந்து, 2024ல் 15வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

**சரக்கு போக்குவரத்து**

- நாட்டின் போக்குவரத்து செலவை குறைப்பதில் ஜி.எஸ்.டி., முக்கிய பங்காற்றுகிறது. ஒரே நாடு, ஒரே வரி திட்டத்தின் வாயிலாக, மாநில எல்லைகளில் காத்திருப்பது குறைந்ததால், சரக்கு போக்குவரத்து பயண நேரம் 30 சதவீதம் குறைந்துள்ளது.
- மேலும், 2030க்குள், உலக வங்கியின் போக்குவரத்து செயல்திறன் குறியீட்டில், 'டாப் 25' இடத்திற்குள் இடம்பெற, இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

**எலக்ட்ரானிக்ஸ்**

- 2023-24ம் நிதியாண்டில், ஒட்டுமொத்த ஐபோன் உற்பத்தியில், 14 சதவீதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- மேலும், உலகளாவிய எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் ஏற்றுமதியில், இந்தியா நான்கு இடங்கள் முன்னேறியுள்ளது.